**<u>வட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 267/*2021*</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *2023*- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *19* - ஆம் நாள் புதன் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய *PW2* - வது நபரின் வாக்குமூலம் *( 1969*- ஆம் ஆண்டின் *54* வது விதியில் *9*- வது பிரிவின் ஏற்பாட்டின் படி *)* திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது. | | | | | |
| பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ராமசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | புதுப்பேட்டை | சமயம் | : | – |
| சாதி | : | | வயது | : | 84/2023 |

பிரதி**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

*1.* எனது முதன்மைவ வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லி வழக்கறிஞர் தயாரித்தாரா அல்லது அவரே தயாரித்து வைத்திருந்ததில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் வக்கீல் தயாரித்து வைத்திருந்ததில் நான் கையொப்பம் செய்தேன். தாவா சொத்தில் உள்ள வீடு பற்றி எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனுடைய நீள அகலம் பற்றி என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை நான் பர்வையிட்டுள்ளேனா என்றால் பார்த்திருக்கிறேன். மேற்படி தாவா சொத்து 4 அறைகள் கொண்டது என்றால் சரிதான்.

2. அந்த வீட்டில் எத்தனை பேருக்கு பங்கு உள்ளது என்ற விபரம் தெரியுமாள ன்றால் 2 பேருக்கு பங்கு உள்ளது. அந்த வீட்டில் அம்மாமுத்து என்பவருக்கு ஒரு பாகம் உள்ளது என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதியின் தந்தை பச்சமுத்து என்பவருக்கும் ஒரு பாகம் உள்ளதா என்றால் அம்மாமுத்தும் பச்சமுத்துவும் ஒரே நபர் ஆவார். நாச்சியப்பன் மகன் நல்லன் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பூர்வீகமாக யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. தாவா சொத்திற்கு தென்புறம் வாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறாரா என்றால் குடியிருந்து வருகிறார் அதற்கு தனி பட்டா உள்ளது. மேற்படி தனிப்பட்டா யார் யார் பெயர் உள்ளது என்றால் வாதியினுடைய தந்தை மற்றும் தாயார் பெயர் உள்ளது. வாதியின் தந்தை மற்றும் தாயார் பெயர் காவேரி அம்மாள் பாலுசாமி படையாச்சி ஆகும். அந்த பட்டாவின் சர்வே நம்பர் 331/3 ஆகும். தாவா சொத்துக்குரிய பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் காவேரி அம்மாள் மற்றும் பச்சமுத்து பெயரில் உள்ளது.

4. தாவா சொத்திற்கு தென்புறம் ஆஸ்பெஸ்ட்டாஸ் போட்ட வீட்டிற்கு இடையில் சுவர் உள்ளதா என்றால் கட்டுக்கோப்பு வீட்டு சுவர் உள்ளது. காவேரி அம்மாள் தனது பேரப்பிள்ளைகளுக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்தபோது நான் உடனடிருந்தேனா என்றால் இல்லை. அதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி தற்போது ஆஸ்பெஸ்ட்டாஸ் போட்ட வீட்டில் குடியிருக்கிறாரா அல்லது வேறு இடத்தில் குடியிருக்கிறாரா என்றால் ஆஸ்பெஸ்ட்டாஸ் போட்ட வீட்டில்தான் குடியிருந்து வருகிறார். ஆஸ்பெஸ்ட்டாஸ் வீட்டிற்கு எந்த பக்கம் வாசற்படி உள்ளது என்றால் மேற்கு பக்கம் வாசற்படி உள்ளது.

5. பிரதிவாதி கட்டுக்கோப்பு வீட்டை இடிக்க முற்பட்டதாக எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடம் எந்த தேதி இடிக்க முற்பட்டா ர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி இடிக்க வரும்போது நான் அந்த இடத்தில் இருந்தேனா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. என்னை சாட்சி சொல்ல வாதிதான் அழைத்தார். தாவா சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதி அழைத்ததிதன்பேரில் நான் வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதைதான் நான் தொழிலாக வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

DMUNICIPAL